மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1969-70-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 67 நிலவள வங்கிகள் பதிவாகியுள்ளன?

(இ) & (உ) : இம் மன்றத்தின் முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சபாநாயகர் அவர்களே, இம் மன்றத்தின்முன் ....

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவர் அவர்களே, இங்கே சபாநாயகர் அவர்களே என்று சொல்கிறார்கள். தலைவர் அவர்களே, சேர்மன் அவர்களே என்று சொல்வதுண்டு. சபாநாயகர் என்று சொல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : சேர்மனையும் சபாநாயகர் என்று சொல்வதில் குற்றமில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ள கணக்குப்படி, 67 வங்கிகளில் பல வங்கிகளில் அரசாங்கம் ரூ. 25 ஆயிரம் பங்கு மூலதனத்திற்குச் சமமாகத் தொகை அளிக்க முன் வந்தும்கூட, பதிவு செய்து 9 மாதங்களாகியும் கூட, இன்னும் 5,000, 6,000 அளவில்கூட பங்குத் தொகை வசூலாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்தப் பகுதியில் நிலவள வங்கி செயல்பட போதுமான ஆதரவு இல்லாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட புள்ளிவிவரம் 31--3--1970 வரையில்தான் அதற்குப் பிறகு பல மாதங்கள் ஆகியிருக்கின்றன. உறுப்பினர்கள் சேகரிக்கும் பங்குத் தொகைக்கு மேற்படாதவாறு, ரூ. 25 ஆயிரம் வரையில், தமிழக அரசு பங்கு மூலதனம் வழங்கியுள்ளது. இப்போது ரூ. 25 ஆயிரம் வரையில் பங்கு மூலதனம் சேகரிக்காத நிலவள வங்கிகள் திருவாலங்காடு, வாலாஜாபாத், கும்மிடிபூண்டி, ஸ்ரீபெரும்புதூர், கோத்தகிரி; 67 வங்கிகளில், மற்ற எல்லா நிலவள வங்கிகளிலும் உறுப்பினர்கள் ரூ. 25,000 மட்டுமல்லாமல் ரூ. 35 ஆயிரம், 40, 45 ஆயிரம் என்றுகூட பங்குத்தொகை சேகரித்திருக்கிறார்கள். இருந்தாலும் அரசு ரூ. 25,000 தான் கொடுத்திருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—CALLING ATTENTION TO HEALTH HAZARD AND OBSTRUCTION TO THE PUBLIC CAUSED BY STREET VENDORS IN ULL STREET IN VIRUDHUNAGAR.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the grave health hazard and obstruction to the public caused by the Government Order staying

[a] Printed as Appendix on pages 126–127

26th August 1970] [Thiru D. Santosham]

the action taken by the Virudhunagar Municipality to evict the street vendors who are encroaching and causing obstruction and committing nuisance in the narrow "ULL" street in Virudhunagar.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: விருதுநகர் நகராட்சியைச் சேர்ந்த 12-வது வார்டில் உள்ள "உள் தெரு"வில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்ற வேண்டும் என அத்தெரு மக்களிடமிருந்து மனுக்களும் விருதுநகர் நகராட்சி மன்றத் தலைவரிடமிருந்து கடிதமும் வரப்பெற்றதன்மேல், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், 25--2--1970 அன்று விருதுநகர் நகராட்சி மன்றத் தலைவர், அத்தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர், சிவகாசியிலுள்ள மாவட்ட ஆட்சி உதவித் தலைவர் ஆகியோருடன் அப்பகுதியைப் பார்வையிட்டார். அச்சந்து குறுகலானது. அக்குறுகலான சந்தில் தெருக் கடைக்காரர்கள் கடை பரப்பியிருப்பது கடுமையாகவுள்ளது, மக்களின் நடமாட்டத்திற்குத் தடையாகவுள்ளது என்பதெல்லாம் ஆட்சேபிக்கப்படத்தக்கதாகும். அது தெருவாசிகளுக்குத் தொல்லையாகவுள்ளது, மக்களின் நடமாட்டத்திற்குத் தடையாகவுள்ளது, கழிவுநீர் அகற்றுவதற்கும் தடையாகவுள்ளது என்பதெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி அங்காடியினருகில் உள்ள மாற்றுமனையையும் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார். உள் தெருவிலிருந்து வெளியேற்றப்படவேண்டிய தெருக்கடைக்காரர்கள் தங்கள் வாணிபத்தை நடத்த அங்கு தாராளமாக இடமிருப்பதையும் கண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட அனைவருடனும் இதுபற்றி விவாதித்த பிறகு உள் தெருவிலுள்ள தெருக்கடைக்காரர்களுக்கு அத்தெருவிலிருந்து வெளியேற 31--3--1970 வரையில் அவகாசமளிக்குமாறும், 1--4--1970 முதற்கொண்டு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் நகராட்சிக் கமிஷனருக்குக் கட்டளையிட்டார். அப்பகுதியிலுள்ள நகராட்சி அங்காடியைக் குத்தகைக்கு எடுத்துள்ள திரு. பி. ரத்தினம் 11--3--1970 நாளிட்ட தனது மனுவில் அக்கடைக்காரர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை ஆறு திங்கட்கால அளவிற்குத் தள்ளிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த மனுவை விருதுநகர் நகராட்சிக் கமிஷனருக்கு அனுப்பி, நகராட்சியின் கருத்துக்களை அறிவதற்காக அந்த மனுவை நகராட்சி மன்றத்தின்முன் வைக்குமாறும் நகராட்சி மன்றத்தின் கருத்துக்களை அறிந்து தமது அறிக்கையை அவர் அனுப்பும் வரையில் இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதைத் தள்ளிப்போடுமாறும் அவருக்குக் கட்டளையிட்டார்.

உள் தெருவிலுள்ள தெருக்கடைக்காரர்களை வெளியேற்றக் கூடாது எனக் கிளர்ச்சி ஒன்று நடந்து வருகிறது. தட்சிண மாற நாடார் சங்கம் இந்த இடம் ஒரு காலத்தில் தங்களுக்குச் சொந்தமானதென்றும், நீண்ட காலமாகவே இந்த இடம் அங்காடியாகப் பயன்படுத்தப்பட அனுமதிக்கப்பட்டு வந்துள்ளதென்றும் இக்காரியத்திற்காக இந்த இடம் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதென்றும் கூறுகின்றது. 15 ஆண்டுகளுக்கும் மேலாகவே இத்தெரு அன்றாடம் காலை 8-30 முதல் 11-30 வரையில்

காய்கறிகளையும் பிற அழுகும் பொருட்களையும் விற்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்தெரு வண்டிகள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், உள் தெருவில் காய்கறி விற்பனை நடப்பதால் அப்பகுதி மக்கள் பயனடைகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. மேற்சொன்ன சூழ்நிலைகளில், இது குறித்து விரிவாக ஆய்ந்து முடிவு செய்யும் வரையில் உள் தெருவிலுள்ள தெருக்கடைக்காரர்களை வெளியேற்றுவதை நிறுத்தி வைக்குமாறு நகராட்சிப் பொறுப்பு அதிகாரிக்குக் கட்டளையிட்டுள்ளார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் விரிவாகப் பரிசிலனை செய்வதற்காக இதனை எடுத்துக் கொண்டுள்ளபடியால் தெருக்கடைக்காரர்களை வெளியேற்றுவது குறித்து நகராட்சி மன்றத்தின் கருத்துக்களை அறியுமாறு கேட்டுத் தமது அலுவலகம் அனுப்பிய குறிப்பை ரத்து செய்யப்பட்டதாகக் கருதுமாறும் விருதுநகர் நகராட்சி ஆணையாளருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆய்வில் இருந்து வருகிறது.

III—DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1970–71 AND SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1969–70 OF THE TAMIL NADU ELECTRICITY BOARD—*cont.*

MR. CHAIRMAN : The discussion on the State Electricity Board Budget will now resume.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். மின்சார வாரியம் இந்த அவையில் சமர்ப்பித்த இந்த அறிக்கையின்மீது எந்தவிதமான ஓட்டெடுப்பும் நடத்த முடியாது என்ற போதிலும்கூட, இது விவாதத்திற்குரிய ஒரு அம்சமாகத்தான் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற வகையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தச் சபையில் உள்ள உறுப்பினர்கள் பலரும் கூறக்கூடிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, மின்சார வாரியம் நன்கு செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டும் என்று அரசினரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாகவே மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், அவ்வளவு திருப்திகரமான முறையில் நம் தமிழ் நாட்டில் அது இயங்கவில்லை என்று கூறலாம். தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிராமப் பகுதிகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும்கூட, இந்த வாரியத்தில் கட்சிக் கண்ணோட்டத்தோடும், கட்சி மனோபாவத்தோடும்தான் மின் இணைப்புகள் கொடுக்கப்படுவதாக நான் கருதுகிறேன். எதற்காக நான் இதைக் கூறுகிறேன் என்றால், ஒரு அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு திட்டமானது பொதுவாக எந்த ஒரு கட்சிக் கண்ணோட்டத்தோடும் இல்லாத வகையில் செயல்பட வேண்டும்.